164565

தேசிக நாராயணர்
திருவந்தாதி

O-1,12MML1,D
N32
164565

ஓம்

தத்ஸத்

பரப்ரஹ்மணே நம:.

அகஸ்திய மஹரிஷிமரபு

# தேசிக நாராயணர் திருவந்தாதி.

ஆக்கியோன்

ஸ்ரீ நாராயண தேசிகரவர்களின் மாணவரும்

ஷை தேசிகர் மடாலயத்தின் அதிபதியுமாகிய

உயர்திரு

ஞாநாநந்த

**மணவாள சுவாமியவர்கள்.**

பதிப்பித்தவர்

இந்நூலாசிரியரின் பிரதம சீடன்

சுவாமி அருணகிரிநாதன்.


பதிப்பித்த இடம்

சென்னை, மண்ணடி,

பூ. ரா. அப்பாதுரை முதலியாரவர்களது

சரவணபவ அச்சுக்கூடம்.

1932

164565


O-712MML1,D
N32



சாது
ஸ்ரீ நாராயணதேசிகர்

நேரிசை வெண்பா.

பார்புகழுஞ் சித்தர் பதினெண்மர் தங்களுளே
யார்கலியை யுண்ட வகத்தியனார்—பேரின்
ணிலவுலகி லென்று நிலவிடச்செய் ஞானத்
[illegible]ராயணர்தாள் சேர்.



ஞானானந்த
ஸ்ரீ மணவாளசவாமிகள்.

சென்னை-600 008.
164565

ஓம்.
தத்ஸத்.
பரப்ரஹ்மணே நம:.

# சாத்துகவிகள்.

அறிவானந்த வடிகளின் பிரதமசீடர்.
திருநெல்வேலி. வல்லநாடு.
உயர்திரு. சிவராமலிங்க சுவாமியவர்களியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அண்டரும் போற்று மகத்திய முனியா றமர்ந்தநா ராயணக் குரவன் தொண்டமர் மணவா ளப்பெயர் சான்றோன் றொடுத்தனன் சொற் றமிழ் மலரான், மண்டக மன்பார் மதுவொடு ஞான மணங்கெழுப் புதியநன் மாலை, கொண்டதன் னிறைநா ராயணர் திருவந் தாதி யென் மதிவலோர் கொளவே.

---

சிதம்பரம். மௌனசுவாமிகள் மடம்
ஸ்ரீ. செல்லப்ப ஞானதேசிக சுவாமிகளின் மாணவர்
உயர்திரு. முக்தாநந்த ஸ்வாமியவர்களியற்றிய
பன்னிரண்டு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்பெருகு மலயமுனி வழிவந்த நாரண
  தேசிகன் றனதடியினைச்
செவ்வே யணிந்தவ னவனருட் பார்வையாற்
  றீதொரீஇ நின்றமேலோன்
பார்புகழ் துறவுவை ராகமுட னுயிரெலாம்
  பயன்பெறு குணக்குன்றனான்
படிறிலா ஞானவா நந்தமண வாளன்சீர்ப்
  பண்டைநூல் பலவு மாய்ந்தோ
னோர்பாவு முலகனைத் தும்முய்ய வருளினா
  லெழிற்குருவின் மாபெருமையோ
டேத்துசா தனசாத்தி யங்களெல் லாந்தொகுத்
  தியற்றுநூல் பெயர்மொழிகுதுந்
தார்சூடி வேதாந்த போதநி தேசிகநார
  ணன்றிருந லந்தாதியே
தரணியிற் புகழோங்கி யென்றமிழ்து நின்றாசீர்
  தழைத்துமிக வாழ்கமாதோ.

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழாசிரியரும்
தருக்க வேதாந்த போத காசிரியருமாகிய
ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மறையுரைக்கும் பெரும்பொருளை வந்தடைந்து தோத்
திரஞ்செய் மாண வர்க்கு, முறைதிறம்பா மற்புகன்று முத்தி
நெறி காட்டியருண் முத்தன் மாயைக், கறையகறே சிகநா
ரா யணர்திருவந் தாதியினைக் கற்றோ ரேற்கக், குறைவறு
ஞா னாநந்த மணவாள முனியியற்றிக் கொண்டான் சீரே.

ஸ்ரீ. சுப்பிரமணியசிவம் அவர்களின் மாணவர்
உயர்திரு. சுவாமி சுந்தரபாரதியா ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

தேசிகநா ராயணரின் சீரதனை யெஞ்ஞான்று
மாசகல வோதி மகிழவே—பேசுந்
திருவந்தா திப்பெயராற் றிவ்விய நூ லீந்தார்
திருமணவா ளஸ்வாமி தேர்ந்து.

ஸ்ரீ நாராயண தேசிகரின் மாணவர்
தமிழ் வித்வான். கவிபூஷணம். பெங்களூர்
ஸ்ரீமத். சே. கோ. கணபதி நாயகரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இருள்வளர்க்கு மனவழியே சென்றெவர்க்கு மிடையூறே யிழைப்ப
வர்க்குந், தெருள்வளர்க்கும் பொருண்மலிந்த தேசிகநா ராயணர்தந்
திருவந் தாதி, மருள்வளர்க்கும் வழியடைக்கு மாஞானா நந்தமண
வாள சாமி, யருள்வளர்க்குங் குருபத்தி யவனிமுற்றும் பரந்திடற்கா
வளித்தான் மாதோ.



திருத்துருத்தி. இந்திரபீடம். ஸ்ரீ காயாத்திர சுவாமிக
ளாதீன வழிவந்த ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமியவர்களின்
சிஷ்யப்பிர சிஷ்யரும், சென்னை. பெருமாள்பேட்டையில்
வசிப்பவருமாகிய
ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமி யவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

நந்தாத தேசிக நாரா யணர்திரு
வந்தாதி யென்னுநூ லாய்ந்தளித்தார்—வந்தார்
துணைவாவின் மெய்தச் சமைஞாநா நந்த
மணவாள சாமி மகிழ்ந்து.

வைதி ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமி யவர்களின்
திருவடித் தொண்டர். பிரசங்க சிந்தாமணி திருவான்மியூர்
ஸ்ரீமான். த. கோவிந்தசாமி பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈசனவ னேவந்து சகமை யாண்டா னெனவுலக மிருப்பகை கூப்புக்
தேசிகநா ராயணர்மேற் சிறந்ததிரு வந்தாதி செப்பி னான்காண்
தேசிகநா ராயணர்தா மென்னுளுந் தன்னகத்தே சிந்தித் தேத்து
மாசறுஞா நாநந்த மணவாள சுவாமியெனும் மதிவல் லோனே.

வைதி ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமி யவர்களின்
திருவடித்தொண்டர்
சென்னை, இராயபுரத்திற்கடுத்த சிவஞானபுரம், ஸ்ரீமான்
காளத்தி. இ. சிதம்பரசாமி புராணிகரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திக்கனைத்தும் புகழ்நிறைந்த தேசிகநா ராயணர்தந் திருவந் தாதி
யெக்கலையு முணர்ந்தவர்ஞா னாநந்த மணவாள னென்னுஞ் சாமி
யிக்கவினு ருலகிலுளார் தினமோதி யோதியுளந் திருளை யோட்டி
யிக்கவழி வாய்ந்த வருவாகி விளங்கிடவே விளம்பி னாரால்.

சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை, தையப்பமுதலி வீதி,
Retired Sub-Registrar.
ஸ்ரீமத். மேலவலம், சிவகாருண்ய முதலியார், B. A.
அவர்களியற்றிய

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அங்கையிற்றண் ணீர்க்கடலுந் தமிழ்க்கடலுஞ் சேர
வடக்கியமா முனிவனகத் தியன்மரபில் வந்த
துங்கமுறு சாதுநா ராயணதே சிகர்தஞ்
சோதியடி யைப்பரவச் சொன்மலரைக் கொண்டு
சங்கையின்ஞா நாநந்த மணவாள சாமி
சார்ந்தவடி யார்புலவர் தாமகிழ்ச்சி கூர
பங்கமிலா வந்தாதி வெண்பாவோர் நூறும்
பழயவினை தீர்ந்தொழியப் பகர்ந்திட்டான் மன்னே

ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் அவர்களின் மாணவர்
திருவளர். ச. கந்தசாமி முதலியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தந்தையாய்த் தாயு மாகித் தாரமாய்த் தமரு மாகி, முந்தையூழ் வினைகட் கேற்ப முழுதுல களிக்குஞ் சோதி, யெந்தைநா ராய ணப்பே ரியற்குரு வாகி நின்று, சிந்தைநோ யகற்று தற்குச் சீரிய மருந்து மானான்.

அகத்திய மரபின் வந்தஅன்னதே சிகனைப் போற்றி, மகத்துவ ஞான நந்த மணவாளன் மாசி லாதா, னிகத்திய லெம்ம னோர்க்கென் றீந்தனன் திருவந் தாதி, சகத்திய லன்பர்க் குற்ற சாதன மாகு மன்றே.

ஸ்ரீநாராயண தேசிக ரவர்களின் மாணவர்களிலொருவராகிய
பண்டித. ஸ்ரீ. பூ. அ. கோவிந்த ராஜதாச ரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மாசில்லா வுள்ளமுளான் வேதாந்தக் கலையதியும் வழங்கி யார்க்கும்
ஆசியதே பகருமென்றன் குருபரனார் திருவடியே யன்பா னேக்கி
வாசியறிந் தானறவர்க் கருத்தொக்க நிலைக்குமண வாள ஸ்வாமி
தேசிகநா ராயணர்தந் திருவந்தா தியைக்கூறித் திகழ்ந்தான் மன்னே.



பொதிகைமலைச் சித்தர் மரபு
ஸ்ரீ. நாராயண தேசிகர் மாணவர் பண்டித ஸ்ரீ.
பூ. அ. கோவிந்தராஜ தாஸரவர்களின் தலைமை மாணவர்
ஸ்ரீமத். தி. முனிசாமி நாயக ரவர்களியற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா.

எழுத்தறி வித்த விறைவகத் தியனார்
விழுக்குரு மரபின் வேதாந்த வித்வ
சிரோமணி நாரண தேசிகர் மீது
பரோப காரப் பான்மையிற் றேசிக
நாரா யணர்திரு வந்தாதி நவின்றனன்
பேரா வன்பின் பெருந்தகை யெற்கு
மல்லன்மா ஞால மறையினு மறையாக்
கல்விப் புணையாய்க் கையளித் துதவிய
தீன தயாள திருவுரு வுடையோன்
ஞானநூல் வல்ல ஞாநா நந்த
மணவாள சுவாமி வள்ளுவர் சொற்ற
குணமெனுங் குன்றுடைக் கோவலன் றனது
நன்றியை விரித்து நானுரைத் திடவென்
னின்மொழிப் பூக்களை யிரைத்தனன் மகிழ்ந்தே.

சாத்துகவிகள் முற்றிற்று.

---

இந்நூலாசிரியரவர்களின்
பிரதம சீடன்

சுவாமி அருணகிரி நாதன் இயற்றிய

# சிறப்புப்பாயிரம்.

சச்சிதா நந்தத் தனிமுத லாகி
யிச்சக மியாவு மீன்றளித் தழித்துப்
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் கின்ற
வச்சிவன் றானே யவனியின் மீதி
லிச்சையோர் சிறிது மின்றியே தோன்றி
மெய்க்குரு வடிவாய் விளங்கி யன்பரின்
பொய்ச்சிதா பாசம் போக்கிவீ டருளும்

என்பதனல்

அன்றொரு நால்வர்க் கவண றமுரைத்துங்
குன்றுதோ றாடுங் குமாரசற் குருவா
யிகத்தினிற் றோன்றி யெம்மர போங்க
வகத்திய முனிவர்க் கருளியு மவன்வழி
வந்த ஸ்வகியா நந்தமா யோகி
யெந்தை நாத முனிவனு மீண்டு
மந்தரு முணர வத்துதத் துவத்தை
வந்தவர்க் குரைத்தும் வராதவ ரிடத்திற்
றண்ணளி யோடு தானே சென்றவ
ரெண்ணுதற் கரிய வின்ப மளித்து
மனுமா பறவை மற்றுள வுயிரினு
மனாரு தமதா யறிவினுக் கறிவா



35 முடிவிலாப் பல்பிறவி மோகத்தை நீக்கி
யடிநடுவு மற்றதோ ரான்ப—வடிவதனைப்
பார்பா ரெனக்காட்டும் பாவலனு ராயணன்றன்
சீர்மைதனை வாக்கேநீ செப்பு.

36 செப்புங் கலைகளெலாஞ் சேட்டை மனமறவே
தப்புவழி செல்வோர்க டாமறியா—ரொப்பில்லா
வாரியனைச் சார்ந்தாங் கவன்மொழியை யேந்துவையேல்
சீரடைவாய் நெஞ்சே தெளி.

37 தெளியாரைக் கூடித் திரிவாயே னெஞ்சே
தெளியும் புழுக்கூட்டை நீங்கா—யளிபோலப்
போரு மின்பப் பெருக்கிற் குளிப்பதற்கு
நாரா யணகுருவை நாடு.

38 நாடுமனை மக்களெலா நாசமுறு மற்காக்க
வாடித் திரிந்துழலும் வன்னெஞ்சே—கூடுவிட்டுன்
னாவிதனைக் கொண்டேக வன்னாள் வருமெமனை
யேவில கென்பவரா ரிங்கு.

39 இங்கங் கெனுதபடி யேகமாய் நித்தியமா
யெங்கு நிறைந்தபே ரின்பநமுட்—டங்குதற்கு
நாரா யணகுருவை நாடோறும் போற்றுவையேல்
வாராவின் பாமுன் வசம்.

40 வசமாய்க் கருவில் வருந்தி வெதும்பித்
தசமாதந் தன்னிலொரு தையல்—கசுமால
யோனிவழி தள்ள வுலகிற் கிடந்துழலு
மீனமதைப் போக்கினன்று ளேத்து.

41 எத்துவாய் நெஞ்சே யெளியே னபாத்திரனா
பாத்திரனா வென்றுபன்னாட் பாராம—லோத்தின்
முடிபொருளைக் காட்டு முனிவனா மெந்தை
கடிமலர்ப்பூம் பாதமதைக் கா.

42 காவகத்தே பன்னாள் கடுந்தவஞ்செய் யோகிகளு
மேவுவதற் கெட்டாத மெய்ப்பொருளைத்—தாவு
மனமே நமக்களித்த வான்கருணைத் தேவைத்
தினமு நினைந்திருத்தல் சீர்.

43 சீர்மேவும் வேதச் செழுங்கடலைத் தான்பருகிப்
பார்மேல் முமுக்ஷுப் பயிர்வளரக்—கார்போலப்
பெய்து கருணைமழை பேரின்ப முண்டாக்குஞ்
செய்யகுரு மேகமதைத் தேடு.

44 தேடும் பொருளதனைச் சிக்கனமா கப்புதைத்து
மாடுமனை மக்களுடன் வாழ்வதுவே—வீடுதரு
மென்றெண்ணு மென்னை யெழிலார் குருநாத
னன்றிவைகள் சாதனமென் றான்.

45 சாதனமல் லாததனைச் சாதனமென் றந்தோபொய்ப்
போதனைசெய் புல்லியர்பாற் போகாம-லாதவன்போல்
வேத முடிவை விளக்கி யெனையாண்ட
நாதனா ராயணன்பா னண்ணு.

46 நண்ணு முமூட்சுவெற்கு நாடோறுந் தொண்டன்பாய்
பண்ணு பவிக்குமுத்தி யாங்காவீ—டென்னென் [ப்
றறைவாரைக் கூடி யலையாம லென்றன்
குறைதீர்த்த நாரணனைக் கூடு.



47 கூடுதனில் வாழுங் குருகுவிட் டோடுமுனே
பாடுபட்டுத் தேடு பர்குருவைத்—தேடுகின்ற
முத்திக்கு மூல முடிவாங் குருமொழியே
சத்தியமென் னெஞ்சேநீ சார்.

48 சார்ந்து குருவைச் சமதமங்கள் பெற்றவரே
கூர்ந்தமனச் சாந்திதனைக் கூடுவ—ரோர்ந்திடுநீ
ஈதன்றி வேறுநெறி யில்லையென்ற நாரணரின்
போதனையை யுன்னுமனம் பொன்னா.

49 பொன்னிடத்திற் றோன்றுகின்ற பூடணமெல் லாமந்த
பொன்னையன்றி யுண்டுகொலோ புத்தியே-பின்னமிலா
வுன்னறிவாற் காணு முலகு முயிர்பரமு
முன்னுருவே யென்றவனை யோது.

50 ஓதவு மோர்தி யுணர்வதற்கு மெட்டாத
போதவடி வாக்கிவைத்த பூரணனா—மாதிகுரு
நாரணன்ற னற்புகழை நாவாலே பாடுபவ
ராரணத்தி னுண்மையறி வார்.

51 அறிவாலே காணு மசரசர மெல்லா
மறிவாய்க் கரைத்துவிட்ட வையன்—குறிவழியே
செல்வாயே னெஞ்சே சிவவடிவந் தானாகி
வெல்வா யவித்தையெலா மே.

52 அவித்தையினா லந்தோ வகிலமதி லுழற்
பவித்து மிறந்தும் பலநாள்—தவித்த
நிலைகண் டிரங்கிவந்து தேசிகனைத் தானை
யலைகின்ற நெஞ்சே யறி.

53 அறிவே சிவமாகு மன்னியமா யில்லை
குறியே சிவமாகக் கொள்ளேல்—சிறியார்கண்
மோகத்தா லுண்மைதனை மோசித்துப் பன்னூறு
மாக மெடுப்பா ரவர்.

54 அவரவர்க டன்னினைவே யண்டஞ்ஜீ வேசர்
கவராம் மனமிறந்தார் காண்பார்—தவறும
லீதே முடிவாகு மென்று நமக்குரைத்த
போத்குரு நாரணன்றாள் போற்று.

55 போற்றுங் குருவடிவம் பூத வுடலல்ல
தோற்றங் கடந்த துரியமாம்—போற்றுகின்ற
வேதங்க ளெல்லாம் விளக்குவது மீதேயா
மாதவத்தோர் காண்பார் மகிழ்ந்து.

56 மகிழ்ந்தே யனவரதம் மாசற்றார் சங்கம்
புகுந்த புனிதற்கே போத—மிகந்தனிலே
வந்து பொருந்துமென்ற வள்ளல்நா ராயணன்சொல்
லந்தந் தருமென் றமர்.

57 அமரர்க்கு மெட்டாத வானந்த போத
நிமல குருவருளா னேரு—முமலமறு
மாநந்தம் பொங்கு மகவிருளு நீங்கிவிடு
மோநநிலை தங்கு முடிபு.

58 முடிபுநிலை காணாமல் மோக மயக்கான்
முடிவில் பிறப்பாழி மூழ்கா—தடியேனை
யாரியனாய் வந்திங் கறிவுருவ மாக்கிவைத்த
பேரியநா ராயணனைப் பேசு.



59 பேசுநா வன்மைப் பெரும்புலவன் போராத
மாசுதனை நீக்கு மணவாளன்—தேசுடையான்
போராழி யன்னநிறை பெட்புடையான் யாவனம்
நாரா யணனெஞ்சே நாடு.

60 நாடும் பொருளெல்லா நானல்ல நாடாம
னாடியிருக் கும்பொருளே நானெஞ்சே—நாடும்
பொருளெல்லாம் மண்ணாகிப் போகுமவை மீதின்
மருள்கொண்டு செல்லாமல் வா.

61 வாவாவென் னெஞ்சமே வாழ்வுபெற நங்குரவ
னாவாலே சொன்னெறியி னண்ணுதற்—கோவாமற்
றேவாதி தேவர்களுந் தேடுகின்ற நாரணன்சீர்
நாவாலே பாடுவோ நாம்.

62 நாமரூ பங்கடந்த நாட்டத் திலகுபொரு
ளோமஜெப யாகத் தொளிர்வதோ—காமாதி
சற்பனையெல் லாநீங்கிச் சற்குருநா ராயணனுஞ்
சிற்பரனைச் சேரிலுண்டு சித்து.

63 சித்தன் மரபு சிறக்கவரு நாரணனைப்
பத்தி சிரத்தை பணிவோடு—நித்தநித்தம்
போற்றுதலு மன்னான் புகன்ற பணியதனை
யாற்றுதலு நங்கடமை யாம்.

64 கடமையென வெப்பணியுங் காசினியிற் செய்யின்
மடமையறு முத்திநிலை வாய்க்கு—மடமாந்தர்
காமியத்தாற் செய்யறத்தாற் கன்மமறு தென்றவெங்
சாமிகுரு நாரணன்றாள் சார்.

[கள்

65 சார்ந்து சகஸநிலை சாசுவத வின்பத்தை
யோர்ந்த பெரியோனே யுள்ளபடி—தேர்ந்தமகா
முத்தனெனச் சொல்லு முதனூ லுபநிடத
சித்தாந்த மன்றோ சிறப்பு.

66 சிறப்புடைய ஞானகுரு செப்புநெறி சென்று
பிறப்பிறப்பை நீங்காத பேதா—பறக்கொடிய
பாபமெலாம் போக்கப் பகாதுப வானந்த
தீபிகையை நாடோறுஞ் செப்பு.

67 செப்பு மொழியுடனே சிந்தனையு மோர்படித்தா
யொப்பணினை செய்பவர்த முள்ளத்தே-யெப்பொழுது
சத்துவமே சேடித்துச் சாந்திநிலை யெய்துமென்ற [ஞ்
வுத்தமநா ராயணனை யுன்னு.

68 உன்னிலையு நோக்கா துலகப் பொருளினையே
நன்னிதியென் றெண்ணி நலனிழந்—தின்னலுறுஞ்
சின்னமதி நீக்கியரு டேசிகனை யேத்துவரோ
வின்னற் பிறப்பொழிப்பா ரிங்கு.

69 இங்கங் கெனாதபடி யெங்கு நிறைசிவமே
பங்கமிலா நின்வடிவம் பாரென்றான்—னங்கமெலா
மாநந்தம் பொங்கியெழ வாக்குமருட் டேசிகன்சொல்
மோநக் கரும்பினுதி முத்து.

70 முத்திக்கு மூல முனைப்பற்ற வாரியன்சொல்
சத்யநடை சாந்தஞ் சரிவாதீ—நித்தம்
பழகிவரு வாரேற் பரப்பிரம மாவா
யழகா நெறியீ தறி.



71 அறிந்தபடி நில்லா தகம்பாவத் தீமை
செறிந்த கொடுநெறியிற் சென்றே—மறித்திவ்
வுலகிற் பலகா லுழல்வாரைச் சேர்ந்தார்
மலவுடலை நீங்கார் மதி.

72 மதிவன்மை பெற்றவொரு மாணவனே மேலாம்
பதியுண்மை காணுபரி பாகன்—மதியில்லா
மக்களையு மீடேற்ற வந்தகுரு நாரணனுக்
கிக்கலியி லீடிலையென் றெண்ணு.

73 எண்ணங் கடந்த விறைநிலையைக் காண்பதற்
கண்ணலரு மேமன மாரியன்சொல்—திண்மையுறப்
பெற்றவரே யீண்டுப் பிறப்பை யொழிக்கவலார்
மற்றவரா லாகா மதி.

74 மதிபருதி விண்வாயு மண்ணீ ரெரியோ
டதிபதியா மான்மவறி வாகிக்—கதிபருளு
மத்தனை யன்பர்களை யாட்கொள்ளு மாரியனைப்
வத்துநிலை தன்னைமொழி வான்.

75 மொழியிற் குருமொழியே மோனநிலை காட்டும்
விழியா மொளிர்ஞான வித்தா—மழியாத
விம்மொழியைப் போலவிங் கில்லை சகமொழிக
ளெம்மொழியு மொவ்வா திதற்கு.

76 இதமகிதம் பேசி யிறைவனிலை காணா
வதமர்போ லாகாம லாசான்—பதமலரைச்
சித்தத் திருத்திச் சிவோகமெனச் சிந்தித்தா
லத்தனரு ளேயாவை யன்று.

77 அன்றுலன காதியருக் காரணத்தி னுண்மைதனைக்
கன்றாலின் கீழ்மொழிந்த கண்ணுதலே—பின்றெனை
நாரா யணகுருவாய் ஞான மளித்தனனப் [க்கு
பேராளன் றன்புகழே பேசு.

78 பேசுதற்கு மெட்டாப் பிரமமே தானாகி
மாசு தவிர்க்கவல மாகுருவை—நேசமுடன்
போற்றிவாழ் நன்மனமே போதமய மாவாய்நீ
யேற்றவழி யீதலவோ யிங்கு.

79 இங்குறைந்த பாண்டக் திருக்கின்ற வாசனைபோன்
மங்குமனச் சங்கற்ப வாதனைக—ளங்குமிங்கு
மோயா தலைக்குமதை யோட்டநமக் குற்றதுணை
தேயாத நாரணன்றாள் சேர்.

80 சேர்க்கையினால் வந்தபல தீவினைகள் ஞானகுரு
பார்க்குங் கருணைவிழிப் பார்வையின்றி—யார்க்குமே
தீரா தவைநீங்கித் தேசுபெற வேண்டுவையே
னாரா யணகுருசொன் னாடு.

81 நாடுமிட மெல்லா நமதுருவ மாக்கவல
பீடுடைய ஞானம் பிறங்குநா—ணீடுலகோர்
தேடறுப வானந்த தீபிகையே நின்வினைகள்
வாடும் படிசெய்து வாழ்.

82 வாழ்வாகு மென்றெண்ணி வையகத்தோர் நாடுகின்ற
தாழ்வாகு மின்பமதைச் சாராமற்—சூழ்வினையைப்
போக்கி யெனையாள் புனிதன்றன் வாக்கியமே
மோக்கந் தருமனமே முந்து.



164565
600 0

83 முந்தித் தவங்கிடந்து முத்திநிலை தன்னுடைய
விந்தவுட லெம்மிறைவ னீந்தான்காண்—வந்தவுட
னீங்குதற்கு முன்னே நிலையான வாழ்வுடையப்
பாங்குடனே தேசிகன்றாள் பற்று.

84 பற்றற்ற கண்ணை பவமொழிக்கு மென்றகுரு
நற்றவநா ராயணன்ற னன்மொழியை—யுற்றுணரா
தல்லும் பகலு மவத்திலே யாழ்நெஞ்சே
நில்லாயோ வென்வசமாய் நீ.

85 நீசெல் வழியே கெடுநா ளலைந்ததனுன்
மாசென்னை நீங்கவிலை வண்மைமலி—மாசென்னை
நாரா யணகுருவான் ஞான வடிவானேன்
சோராயோ யென்னுடனெஞ் சே.

86 நெஞ்சே யொருகணமு நில்லாமற் றீயவழிக்
கஞ்சாம லென்னை யழைத்துப்போய்—வஞ்சப்
படுகுழியிற் றள்ளுதற்குப் பண்ணுமுன்றன் சூழ்ச்சி
கடுகளவுஞ் செல்லாது காண்.

87 காணுங் கயிற்றரவுங் கானலிற்றோன் றும்புனலும்
பூணு மயக்காற் பொருந்துவபோன்—மாணு
மெனதுருவிற் கற்பிதமா யெல்லா வுலகு
மனவிரிவாற் றோன்றுமறி வாய்.

88 தோன்று மறிவன்றித் தொல்லுலகம் வேறில்லை
யூன்றி யறிவாயென் றாக்கியே—கான்ற
வசனத்தைப் போல வகிலவின்ப மென்றோர்
வசனத்தா னீக்கினன்றாள் வாழ்த்து.

89 வாழ்த்துதற்கு நாவு மன்னு மனமாரத்
தாழ்த்தி வணங்கத் தலையுமுற்றும்—பாழ்த்த
வகம்பாவத் தாலே யழிகின்ற நெஞ்சே
சுகம்பெறலாம் நாரணன்பேர் சொல்.

90 சொல்லும் பொருளெல்லாந் தோற்றமெனக் காட்டியிங்
கெல்லையிலா வின்ப மெனக்களித்த—வல்லவனைத்
தம்முள்ளே வைத்துச் சதாகாலஞ் சிந்திக்கு
மெம்மனோர்க் குண்டோ விடர்.

91 இடரெல்லாம் போக்கு மெழிலார்வே தாந்தக்
கடலெலா முண்டு களித்துப்—படிமீதி
வின்பமழை பெய்ய வெழுமுகிலா நாரணனே
வன்பவநோய் தீர்க்கு மருந்து.

92 மருந்துகண் டோடு மதலைதனைத் தாயா
ரருந்துணைவைக் காட்டி யழைத்து—மருந்தைமெல
வூட்டுவது போலநமக் குண்மைநிலை தன்னைமெலக்
காட்டியநா ராயணன்றாள் கா.

93 காகா வெனக்கரையுங் காக்கைபோன் முன்கதையை
நாகாய வேபறையு நாவலர்பா—லேகாமன்
மோகாதி யெல்லா முனிந்தகுரு நாராணன்றா
ணீகாவாய் நெஞ்சே நிதம்.

94 நிதமுங் குருவடிவை நீநினைந்தா னெஞ்சே
பதம்பெறுவாய் சொன்னேனிப் பார்மே—லதமவழிச்
செல்லாம லென்னுடனே சேருவையேற் பேரின்ப
மெல்லா முனதுவச மே.



95 உனதுவசப் பட்ட வுயிர்களெலா மண்ணை
யெனதெனதென் றென்றும்போ ரிட்டுத்—தனதுரு
காட்டுநா ராயணன்றன் கான்மலரைச் சாராமற் [வைக்
காட்டமடைந் தார்நெஞ்சே காண்.

96 காணாய்கொ னெஞ்சமே கர்ப்பா சயக்குழியில்
வாணாளிற் பட்ட துயர் மண்மீதில்—வீணாக
வந்தவழி தன்னிற்போய் மாழாமல் வாழ்வளித்த
வெந்தையா நாரணன்றா ளேத்து.

97 ஏத்தித் தொழுவா ரிடரகற்று நாரணரின்
சோத்திரத்தில் வந்தார் குறைநீங்கிப்—பாத்திரரா
யுள்ளத் திருணீங்கி யோங்குபே ரானந்த
வெள்ளமய மாவார் விரைந்து.

98 விரைந்துவா நெஞ்சே வெகுநாளாய் வாட்டு
மாந்தையெலா நீக்கியறி வாக்கி—நிரந்தரமும்
பூரணசு யாட்சியுடன் பூவுலகில் வாழவைத்த
நாரணனைப் போற்றிடுவோ நாம்.

99 நாமே பலநூலை நாடோறுங் கற்றாலும்
போமோ வறியாமை பூரணமாய்—நாமேவு
பாரதத்தி லேகலைவன் பண்ணுகுரு பத்தியைப்போ
னாரணன்பா லன்புசெய்வோ நாம்

100 நானு னெனுமகந்தை யானலிந்து வாடாமற்
றானாகுஞ் சின்மயத்தைத் தான்காட்டுங்—கோனாகு
நாரா யணாய நமவென்று நாடோறும்
பாரா யணம்பண்ணிப் பார்.

நூற்பயன்.

தேசிகநா ராயணன்மேற் செப்புதிருவந்தாதி [illegible]
மாசிலா வீட்டினிடை வாஞ்சைகொ[illegible]
மேறிப் படிப்படியா யின்படைய விவ்வெண்பா
நூறும் படியா தவல்.

முற்றிற்று.

164565
O-,12MMU,D
N32